5.08.2019

அன்புடையீர்.

வணக்கம்.

தங்களது 5.08.2019 தேதியுடைய மின்னஞ்சல் கிடைக்கப்பெற்றோம். தங்கள் கல்லூரி சார்பாக எமது ஒருங்கிணைந்த பண்ணையகத்திற்கு மாணவர்களை அழைத்து வருவது குறித்து பெருமைப்படுகிறோம்.

**எமது அமைப்பு ஈழத்தமிழர்களுக்கான ஒரு அமைப்பு , 1984 ஆம் ஆண்டியில் சங்கங்கள் சார்பு சட்டத்தின்படி பதிவு செய்ய ப்பட்ட மாந்தநேய தொண்டு நிறுவனமாகும்.**

**தமிழகத்திற்கு தஞ்சம் கோரி வந்தவர்களில் , மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்ட எமது கழகத்தின் மூலம், இதுவரை <u>4420 பட்டதாரி மாணவர்களும் 270 (2003 வரை) மருத்துவமாணவர்களும்</u> தங்களது பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்கள் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.**

**ஈழத்து அகதிமுகாம்களில் பணிகளை தொடர்ந்த எமக்கு 2004 ஆண்டு தமிழ்நாட்டில் ஏற்பட்ட சுனாமி தாக்குதலுக்கு பிற்பாடு இந்திய மக்களுக்கு பணி செய்வதற்கான வாய்ப்புக்களும் எமக்கு கிடைத்தன.**

**அதனைத்தொடர்ந்து இன்றுவரை இந்திய மக்களுக்கானதும் , ஈழ அகதி மக்களுக்கான பல்வேறு பட்ட பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.**

**அதேபோல் தற்போது இந்திய தொழில் நுட்ப நிறுவனமான எச் .சி.எல் நிறுவனத்துடன் இணைந்து , அரச பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு மற்றும் 7**

ஆம் வகுப்பு மாணவர்களைக்கொண்டு அந்த அந்தப் பள்ளிகளில் , பசுமைப்பள்ளிகளையும் ,அமைத்து மாணவர்களுக்கு தேவையான சுற்றுப்புறச்சூழல், மற்றும் இயற்கை வேளாண்மை , முறைகளையும் பாடமுறைகளாகவும், செயல்முறைகளாகவும் நடத்தி வருகிறோம்.

அதேபோல பழைய மகாபலிபுரம் சாலை நாவலூர் சிறுச்சேரி சிப்காட் , அருகே தாழம்பூர் நத்தம் கிராமத்தில் அமைந்துள்ள எமது ஆபர் நல்லாயன் தாங்கு நிலை ஆராச்சி மையம் ஊடாக .இந்திய மற்றும் வெளிநாட்டு வாழ் மக்களுக்கு நீர்க்கீரை *spirulina* என்று அழைக்க கூடிய ஸ்பைருலினா ( இது ஒரு ஊட்ட உணவு ) வளர்ப்பு முறை , பராமரிப்பு முறை, மதிப்பேற்றும் முறை, போன்றவற்றையும் கடந்த 17 ஆண்டுகளாக கற்றுக்கொடுத்து வருகிறோம்.

தமிழகத்தின் பல்வேறுபட்ட கல்லூரிகளில் இருந்தும் , பள்ளிகளிலும் இருந்தும் ஏராளமான மாணவர்கள் தொழில் கல்வி அறிவுக்காக எமது ஆராச்சி மையத்திற்கு வந்து செல்கின்றனர்.

மேற்படி ஆராச்சி மையத்தில் நீர்க்கீரை வளர்ப்பு , சோலார் பயன்பாட்டு முறை, சாண எரிவாயு உற்பத்தி மற்றும் பயன்பாட்டு முறை , அசோலா உற்பத்தி முறை, நாட்டுக்கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, வாத்து வளர்ப்பு, பசுமாடு வளர்ப்பு, நன்னீர் மீன்வளர்ப்பு, பசுந்தீவனங்கள் வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையகம் , போன்ற பல்வேறுபட்ட வாழ்வாதார பயிற்சி முறைகளையும் கற்றுக்கொடுத்து வருகிறோம்.

ஈழத்தில் இருந்து உயிர்பாதுக்காப்புக்காக தமிழகத்திற்கு எமது அகதி மக்கள் வந்திருந்தாலும் , எம்மை பாதுகாத்து எமக்கெல்லாம் , இந்திய மக்களுக்கு கிடைக்கும் உதவிகள் போல அனைத்து உதவிகளையும்

வழங்கிய இந்திய மக்களுக்கு கைமாறு செய்யும் ஒரு நிகழ்வாகவே இதனை நாம் நடத்தி வருகிறோம்.

இருந்தும் ஈழத்து அகதி மக்களின் வாழ்வாதாரத்திற்காக பண்ணைக்கு தனிப்பட்ட முறையில் விஜயம் செய்யும் நபருக்கு ஆலோசனைக் கட்டணமாக மையம் ரூபா 250 பெற்று வருகிறோம்.

அதேவேளை , கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணமாக 50 சதவீதம் கழிவும் வழங்கி ஊக்குவிக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒரு விஜயத்தின் போது விழிப்புணர்வு நிகழ்வை நடத்துவதற்கும் , தகவல்களை மாணவர்கள் நினைவாக வைத்துக்கொள்ளுவதற்கும் ஏதுவாக அதிக பட்சம் 100 மாணவர்களை வருகைக்கு அனுமதிக்கிறோம். .

100 க்கு மேற்பட்ட மாணவர்கள் இருந்தால் தொடர்ந்து வரும் அடுத்த நாட்களிலும் அவர்களுக்கான விழிப்புணர்வை மேற்கொள்வோம்.

வருகை தரும் கல்லூரி மற்றும் பள்ளிகள் நினைவாகவும் , பசுமையை நேசிக்கும் நோக்கமாகவும் , சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்தும் நோக்கமாகவும் ஒரு சில மரக்கன்றுகளும் மாணவர்கள் கைகளால் அங்கு நடுகை செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

நன்றி.

இப்படிக்கு.

க.இரத்தினராஜசிங்கம்.

வாழ்வாதார திட்ட ஒருங்கிணைப்பாளர்.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம். தொடர்பு இல- 98840 00413,

